# அருள்மிகு மகாலட்சுமி திருக்கோயில்
## (அருள்மிகு அஷ்டலட்சுமி திருக்கோயில்)
## பெசன்ட்நகர், சென்னை–90.

## நவராத்திரி திருவிழா செய்திக்குறிப்பு

இத்திருக்கோயிலின் நவராத்திரி திருவிழா 21.09.2017 அன்று தொடங்கி, 29.09.2017 வரை நடைபெறுகிறது. 30.09.2017 விஜயதசமி அன்று பரிவேட்டைக்காக பெருமாள் குதிரை வாகனத்தில் கடற்கரைக்குச் சென்று அம்பு எய்யும் நிகழ்ச்சியுடன் நிறைவடைகிறது. பரி(குதிரை)யில் சென்று தீமைகளையும் தீயவர்களையும் அழித்ததால், இந்நிகழ்ச்சி பரிவேட்டை எனப்படுகிறது. உலக உயிர்களின் தீமைகளைப் போக்கி நன்மை அருள்வதால் – பாருக்குள் சென்று அழித்து நன்மை தருவதால் பார்வேட்டை எனவும் வழங்கப் படுகிறது.

நவராத்திரியின் ஒவ்வொரு நாளும், காலை **ஸ்ரீசூக்த ஆராதனை** நடைபெறுகிறது. **"ஸ்ரீ"** என்றால் **மகாலட்சுமி** என்று பொருள். ஆராதனை என்பது வழிபடும் முறையாகும். சூக்தம் என்பது வேதம் மற்றும் பிரபந்தம் ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள முறைப்படி இலக்குமியை வழிபடும் முறையாகும். இவ்வகை வழிபாடு தமிழகத்தில் இக்கோயில் தவிர வேறெங்கும் நடைபெறுவதில்லை என்பது ஒரு சிறப்பாகும். " பொன்வண்ணத்தினளும் பாவங்களைப் போக்குபவளும், பொன் வெள்ளி ஆகிய மாலைகளை அணிந்தவளும், நிலவு போன்றவளும், பொன்மயமானவளும் ஆன லட்சுமியை என்னிடம் உறைந்து எனக்கு வேண்டியவற்றைக் கொடுத்து சிறப்பிக்கச் செய்வாய்" என்பது வேண்டுதலாக ஒவ்வொரு போற்றுதலிலும் வேண்டப்படுகிறது. இந்த ஸ்ரீசூக்த ஆராதனையின் போது கலந்து கொண்டு இலக்குமியை வழிபடுவோர்க்குச் சகல செல்வங்களும் குறைவின்றிக் கிடைக்கும் என்று பழம்நூல்கள் கூறுகின்றன.

//2//

ஒவ்வொரு நாளும் மாலை 4 மணிக்கு ஒவ்வொரு லட்சுமிக்கும் புஷ்ப அலங்காரம் நடைபெறும்.

வைணவ மரபுப்படி இலக்குமியில்லாமல் திருமாலை வழிபடுவதோ, திருமால் இல்லாமல் இலக்குமியை மட்டும் வழிபடுவதோ பழக்கத்தில் கிடையாது. உடையவரும், வேதாந்த தேசிகரும் இலக்குமி மூலமாகவே திருமாலை வழிபட வேண்டும் எனக் குறிப்பிடுகின்றனர். வைணவர்களில் சிலர் இன்றும் தனிக்கோயில் தாயாரை வழிபட்டு பின்பே கருவறையில் இருக்கும் இறைவனை வழிபடுவது பழக்கத்தில் உள்ளது. திருப்பதியில் கூட கீழே தாயாரை வழிபட்ட பின்பே மலையேறி, ஸ்ரீநிவாசரை வழிபட வேண்டும் என்னும் பழக்கம் உள்ளது. இதை வெளிக்காட்டவே தினமும் மாலை 4 மணிக்கு உற்சவர் ஸ்ரீநிவாசர் மற்றும் பத்மாவதி தாயார் நவராத்திரி தொடர்புடைய ஒன்பது திருக்கோலங்களில் ஒருங்கே சேர்ந்து உள்புறப்பாடு செய்து ஊஞ்சலில் காட்சி தந்து பொதுமக்களுக்கு அருள் அளிப்பார்கள். இந்தத் திருக்கோல தரிசனங்கள் பெரும்பாலும் இராமாயண. மகாபாரத தொடர்புடைய திருக்கோலங்களாக நடைபெறுகின்றன. ஏனெனில், இறுதிநாளில் விஜயதசமியன்று பார்வேட்டைக்குச் சென்று அம்பு போடும் உற்சவம் நடத்தப்படுகிறது. விஜயதசமி அன்று வெற்றி வேண்டி பஞ்சபாண்டவர்கள் வன்னிமரத்தில் வைத்திருந்த அம்பை எடுத்து எய்து வெற்றி பெற்றதால் (விஜயதசமி) வெற்றி தரும் தசமி என வழங்கப்படுகிறது. அதன்படி கீழ்க்கண்ட நாட்களில் கீழ்க்கண்ட அலங்காரங்கள் திருக்கோலத்தில் புறப்பாடு செய்யப்படுகின்றன.

**எஸ். மதனகோபால், எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**செயல் அலுவலர்**

**மு. ஜோதி லட்சுமி, எம்.ஏ., பி.எல்.,**
**தக்கார் / உதவி ஆணையர்**

# அருள்மிகு மகாலட்சுமி திருக்கோயில்
## (அருள்மிகு அஷ்டலட்சுமி திருக்கோயில்)
# பெசன்ட்நகர், சென்னை–90.

# நவராத்திரி – விஜயதசமி திருவிழா
# நாள் 21.09.2017 முதல் 30.09.2017 முடிய

| வ. எண் | தேதி கிழமை | கலைநிகழ்ச்சிகள் | | | திருக்கோலம் – உபயதாரர் |
|---|---|---|---|---|---|
| | | மாலை 5 முதல் 6 வரை | மாலை 6 முதல் 7 வரை | மாலை 7 முதல் 8 வரை | |
| 1 | 21.09.2017 / வியாழன் | மேளம், நாதஸ்வரம் வாத்ய நிகழ்ச்சி | வாணி கலாலயா ஹெவன் ஆஃப் ஃபைன் ஆர்ட்ஸ், கே.கே. நகர் – பரதநாட்டியம் | சத்யபிரியா தினேஷ்குமார் குழுவினரின் இசை நிகழ்ச்சி | வேணுகோபாலன் திருக்கோலம் |
| 2 | 22.09.2017 / வெள்ளி | கலாநிகேதன் குழுவினரின் பரதநாட்டியம் | உதயகிருதி நாட்டியாலயா மண்ணடி – நாட்டிய நிகழ்ச்சி | ஸ்ரீஅபிநயக்கூடம் பரதநாட்டியம் | வைகுண்டநாதன் திருக்கோலம் |
| 3 | 23.09.2017 / சனி | அனுகிரஹா நாட்டியாலயா, மடிப்பாக்கம் – பரத நாட்டியம் | அபிநயா நாட்டியாலயா, வேளச்சேரி – நாட்டிய நிகழ்ச்சி | அபிநயா நிர்த்த பாடசாலா குழுவினர் – பரதநாட்டியம் | வெண்ணைத் தாழிக்கண்ணன் திருக்கோலம் |
| 4 | 24.09.2017 / ஞாயிறு | R.S. பரத நாட்டியாலா, கொளத்தூர் – பரத நாட்டியம் | சாய்சிவாலயா நாட்டியப்பள்ளி, அம்பத்தூர் – நாட்டிய நிகழ்ச்சி | நாட்டிய சமர்ப்பணம், பெசன்ட் நகர் – பரத நாட்டியம் | ராஜகோபாலன் திருக்கோலம் |
| 5 | 25.09.2017 / திங்கள் | ஸ்ரீ நாத வர்ஷா குழுவினரின் வீணை கச்சேரி | S.R.V. பரத நாட்டியப் பள்ளி, ஊரப்பாக்கம் – பரதநாட்டியம் | சஞ்சலா குழுவினரின் பரத நாட்டிய நிகழ்ச்சி | மோகினி அவதாரத் திருக்கோலம் |

//2//

| வ. எண் | தேதி கிழமை | கலைநிகழ்ச்சிகள் | | | திருக்கோலம் – உபயதாரர் |
|---|---|---|---|---|---|
| | | மாலை 5 முதல் 6 வரை | மாலை 6 முதல் 7 வரை | மாலை 7 முதல் 8 வரை | |
| 6 | 26.09.2017 / செவ்வாய் | கவிதா கலாலயா, பரத நாட்டியப் பள்ளி, கொளத்தூர்– பரதநாட்டியம் | பரதாலயா நாட்டியப்பள்ளி, பாண்டிச்சேரி – நாட்டிய நிகழ்ச்சி | அபிலயா நடனப்பள்ளி குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சி | ஏணிக்கண்ணன் திருக்கோலம் |
| 7 | 27.09.2017 / புதன் | ஸ்ரீ அன்னை நாட்டியலயா பரத நாட்டிய நிகழ்ச்சி | ஸ்ரீஹயக்ரீவர் ஆர்ட்ஸ் & கல்சுரல் அகாடெமி, போரூர் – பரதநாட்டியம் | சிவானந்தா கலாலயம், வேளச்சேரி நாட்டியம் & சங்கீதம் நிகழ்ச்சி | சீதாக் கல்யாணம் திருக்கோலம் |
| 8 | 28.09.2017 / வியாழன் | ஸ்ரீ லலிதா நாட்டியாலயா, கொரட்டூர் – நாட்டிய நிகழ்ச்சி | நிருத்யக்ஷேத்ரா நடன நிகழ்ச்சி | நடராஜர் நாட்டியப்பள்ளி, அம்பத்தூர் – பரதநாட்டியம் | இலக்குமி நாராயணன் திருமணத் திருக்கோலம் |
| 9 | 29.09.2017 / வெள்ளி | சரஸ்வதி நாட்டியாலயா, மேற்கு மாம்பலம் பரத நாட்டியம் | ஸ்ரீசாய் நிருத்யாலயா. மேற்கு மாம்பலம் – பரத நாட்டியம் | கரூர் சகோதரிகளின் இசை நிகழ்ச்சி | சரஸ்வதி திருக்கோலம் |
| 10 | 30.09.2017 / சனி | ஜெயலலிதா நாட்டியாலயா கே.கே. நகர் – நாட்டியநிகழ்ச்சி | ராஜரத்னாலயா ஸ்கூல் ஆஃப் கிளாசிகல் டான்ஸ், சாலி கிராமம் பரதநாட்டியம் | பதமஞ்சலி கலைக்கூடம், ஜமீன்பல்லாவரம் நாட்டிய நிகழ்ச்சி | குதிரை வாகனம் பரிவேட்டை வெளிப்புறப்பாடு |

எஸ். மதனகோபால், எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,
செயல் அலுவலர்

மு. ஜோதி லட்சுமி, எம்.ஏ., பி.எல்.,
தக்கார் / உதவி ஆணையர்